RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt20416

OPEN ACCESS

# செம்புலப் பெயல்நீர் காலமும் மெய்ப்பாட்டியல் கருத்தும்

ம. ஜவகர் [அ, *]. இரா. சம்பத் [அ]

[அ] தமிழ்மொழி மற்றும் இலக்கியப்புலம், புதுவைப் பல்கலைக்கழகம், புதுச்சேரி-605014, இந்தியா

# Red Field Water Time and the Philosophical Concept

M. Jawahar [a, *], R. Sambhath [a]

[a] School of Tamil Language & Literature, Pondicherry institute of linguistics and culture, Puducherry, India

* Corresponding Author: jawaharm@gmail.com

Received : 03-07-2020
Accepted : 08-09-2020

Check for updates

**ABSTRACT**

From Sangam literature to modern poetry, all the works are created by the creator using the common language prevailing in the society as a medium. This essay explores the realization of the change of time and the first of the elements is the realization of the change of time.

**Keywords:** Sangam literature, Red Field Water, Society, Concept

## முன்னுரை

சங்க இலக்கியம் முதல் இக்கால புதுக்கவிதை வரையுள்ள அனைத்துப் படைப்புகளும் சமுதாயத்தில் நிலவும் பொது மொழியை ஊடகமாக் கொண்டுதான் படைப்பாளி தன் படைப்பை படைக்கிறான். அத்தகைய படைப்புகரு காலங்களுக்கு ஏற்ற மாற்றத்தை வெளிப்படுத்தும் மெய்ப்பாடுகள் கூறுகளில் முதன்மையாவை காலமாற்றத்தை வெளிப்படுத்தும் மெய்ப்பாட்டைக் கண்டுரைப்பதாக இக்கட்டுரை அமைகின்றது.

## இலக்கியமும் மெய்ப்பாடும்

"ஃபிராய்டு" போன்ற உளவியலாளர்கள் மனிதனின் அடிமனத்தில் பதிந்துகிடக்கும் உணர்ச்சிகள் அகத் தூண்டுதலால் வெளிப்படுகிறன என்பர். இந்த அகத்தூண்டல் செயலும் இலக்கியப் படைப்பிற்குக் புதிர்" என்ற கூறுவர். இதற்கு அடிப்படைக் காரணம் அவனிடம் இருக்கும் "மனம்" என்ற சிந்தனை சக்தியாகும். வாழ்க்கை அனுபவங்களை இரசிப்பதும், வெறுப்பதும் வெளிப்படுத்துவதும் மமே என்கிறார்." (இலக்கியத் திறனாய்வு: இலக்கிம்: சில விளக்கங்கள் - 19)

ஒரே துறையில் பயிலும் இருவர்தம் தங்களுடைய அனுபவங்கள் வெவ்வேறாக இருப்பதைக் காணமுடிகிறது. சங்க இலக்கியக் கவிதை செய்யுள் மொழியை ஊடகமாகக் கொண்டு இயங்கின்றது. புதுக்கவிதை எழுதியவர்கள் மரபுக் கவிதை வடிவங்களில் சில

மாற்றங்கள் செய்து புதுக்கவிதை வடிவமாகப் பயன்படுத்தினர். சங்க காலப் பாடலின் கருத்து ஒன்றை இன்றைய புதுக்கவிதை வெளிப்படுத்தும் போது அக்கருத்து இருவேறு காலத்தின் சமூகத்தைப் பிரதிபலிக்கிறது. இருவேறு சமூகமும் ஒரு கருத்தை முரண் நிலை கொண்டு தோன்றுவதை மெய்ப்பாடு வெளிப்படுத்துகிறது.

குறுந்தொகைப் பாடல்கள் உலகத் தரமுடையவை. உலகிலுள்ள எவ்வளவு சிறந்த காதற்பாடல்களுடனும் ஒப்பிடக் கூடியவை. அவ்வாறு ஒப்பிடும்போது, தன் தனித்தன்மையால் உயர்ந்து நிற்பவை. அத்தகைய பாடல்களி ஒன்று "யாயும் ஞாயும் யார் ஆகியரோ?" எனத் தொffடங்கும் குறுந்தொகை நாற்பதாவது பாடல், பாடலின் சூழலும், அதன் பொருளும் வருமாறு:

"யாயும் ஞாயும் யார் ஆகியரோ?

எந்தையும் நூந்தையும் எம்முறைக் கேளிர்?

யானும் நீயும் எவ்வாழி அறிதும்?

செம்புலப் பெயல் நீர் போல

அன்புடை நெஞ்சம் தாம் கலந்தனவே" (குறுந். 40)

இப்பாடல் குறிஞ்சி திணைக்குரியது. தலைவன் கூற்றாக அமைந்தது "செம்புலப் பெயல்நீரார் பாடியது" இது இயற்கைப் புணர்ச்சி பின்னர், தலைவனும் தலைவியும் எதிர்பாராமல் சந்திக்கின்றனர். காதலிக்கின்றனர், அக்காலக்கட்டத்தில் சாதி, மதம், உறவு முறை வேறுபாடில்லை. ஆனால், தலைவிக்கு தலைவன்மேல் ஒரு சந்தேகம் வருகிறது. இவன் நம்மைப் பிரந்துவிடுவானோ என்பதுதான் அது! அவளின் இந்த உள்ளக் குறிப்பைக்கூட, அவள் கூறாமலே உணர்ந்து கொள்கின்றான் தலைவன், அத்தகைய தலைவியின் அச்சத்தை தவிர்க்க அமையும் வகையில் இச்செய்யுள் பாடல் வரிகள் அமைந்துள்ளது. அதன் பொருள் வருமாறு:

என் தாயும் உன் தாயும் எவ்வாறு உறவினர்? என் தந்தையும் உன் தந்தையும் எம்முறையில் உறவானவர்கள்? எந்த உறவின் வழியாக நீயும் நானும் ஒருவரை ஒருவர் அறிந்து கொண்டோம்? செம்மண்ணில் பெய்த மழை நீர் எவ்வாறு அம்மண்ணோடு ஒன்று கலந்ததோ அது போலத் நாமும் ஒன்று பட்டுகலந்தோம்.

மெய்ப்பாடுக்கும் உவமைக்கும் ஒரு பெரும் உறவுண்டு. அவ்வகையில் இப்பாடலின் பிரிக்கமுடியாதவாறு ஒன்றுபட்ட அன்பினால் நம் நெஞ்சம் ஒன்று கலந்தன். மண்ணோடு கலந்த நீரை எப்படி பிரிக்க முடியாதோ. அவ்வாறே நம்மையும் பிரிக்க முடியாது என்று ஒன்று மற்றொன்றாதல் ஒன்றன் பரிணாமம் அல்லது வளர்ச்சி மாற்றம் அடிப்படையில் ஆக்கம் உள்ளடக்கம் கொண்ட மருட்கை மெய்ப்பாடு உவமையின் வழி வெளிப்படுகின்றது.

மேலே குறிப்பிட்டுள்ள பாடலில் குறுந்தொகை காட்டும் - சங்க காலத்தின் - இயற்கையான காதல் இது. சாதி, சமய, வர்க்க பேதம் பார்க்காத உண்மையான காதல் தற்போது மீரா தன் "குறும்புத்" தொகையில் காட்டும் "நவயுகக் காதல்" - வு வகையானது. இது சாதி, மதம், உறவு முறை எல்லாம் "பார்தது" வருகிறது. அத்தகைய புதுக்கவிதை வருமாறு:

"உனக்கும் எனக்கும்

ஒரே ஊர்-

வாசுதேவ நல்லூர்…

நீயும் நானும்

ஒரே மதம்….

திருநெல்வேலிச்

சைவப் பிள்ளைமார்

வகுப்பும் கூட…

உன்றன் தந்தையும்

என்றன் தந்தையும்

சொந்தக் காரர்கள்…

மைத்துனன் மார்கள்.s

எனவே

செம்புலப் பெயல்நீர் போல

அன்புடை செஙசம் தாம்கலந் தனவே" (ஊசிகள். 48)

மேலே குறிப்பிட்டுள்ள பாடல் கவிஞர் மீரா (மீ. ராஜேந்திரன்) வின் புகழ் பெற்ற பாடல் இன்றை சமூக நிலையை கௌியாக குறும்பாக்களில் மிக சிறப்பாக அமைத்துள்ளார்.

## ஒப்பீடு

சங்க கால அடுத்தியல் ஒன்று இன்றை சமூகத்திற்குப் பொருள்தாத நிலையில் எள்ளி நகையாடப் பட்டிருப்பதை உணர முடிகிறது. சங்க காலம் "களவுக் காதலை" ஏற்றுக் கொண்ட காலம் களவு காதலர் காதலித்தும் உடன்போயும் கணவன் மனைவி ஆயினர். சங்க கால சாதி முறை பற்றி ஆய்வாளர் கூறுவது வருமாறு:

சங்க காலத்தில் "குடி" எனும் சமூக அமைப்பில் சாதிக்குரிய பண்புகளான படிநிலை, தீட்டு, தூய்மை, அகமணம், தீண்டாம, பஞ்சமர் பிரிவு முதலானவை முழுமையான வடிவத்தில் இல்லை. ஒவ்வொரு குடிக்கும் ஒரு தொழில் மட்டும் இருந்து. (சாதியற்ற தமிழர் சாதியத்தமிழர்:30)

ஆனால் பிற்காலத்தில் களவு காதல் பெரும் வீழ்ச்சியை அடைந்தது. சாதி முறை, உறவு முறை திருமணமான கற்பு மணம் நடை முறைக்கு வந்த பிறகு களவு மணம் மறைந்தது, களவு மணத்தின் குறியீடாகிய செம்புலம் பெயல் நீர் என்பது களவுக் காலத்தில் பெருமித மெய்ப்பாட்டை உணர்த்தியது. பிற்காலத்தில் கற்புமணக் காலத்தில் அது எள்ளால் அடியான நகை மெய்ப்பாடாக வருமாற்றம் அமைந்தது. இதனையே இரண்டு பாடல்களும் உணர்த்துகின்றன.

## முடிவுரை

பண்டைய தமிழ்ச் சமூகம் திணை அடிப்படையில் படுத்தப்பட்டது. குறிஞ்சி, முல்லை, மருதம், பாலை என ஐந்து வகையான நில அமைப்பில் நிலம் மக்கள், வாழ்வு முறை

எனலாம், ”செம்புலம் பெயல் நீர் போல” என்று கூட்டு தன்மையை தமிழ் சமூகத்தை உயர்ந்த நிலையை சங்க இலக்கியம் மூலம் அறிந்துகொள்ள முடிகின்றது. இன்றை தமிழ் சமூகதம் தன் வரலாற்றை அறிந்துகொள்ளவது இல்லை. சிலர் சுய நலத்திற்காகவும், அரசியலுக்காவும் சாதியை மையம் கொண்டு செயல்படுகின்றனர். அதன் வடிவமாகவே குழந்தைகள், பெண்கள் என பாராமல் ஆணவக்கொலைகள் இன்றும் அரங்கேறிக்கொண்டுதான் உள்ளன அதை மீரா கேளியாயமைக்கின்றார். தமிழர்களை தலை நிமிர வைக்கும் நாமக்கல் கவிஞர் எழுதிய பாடல் நினைவுக்கு தோன்றுகின்றது. அவை

”தமிழன் என்று சொல்லடா…

தலை நிமிர்ந்து நில்லடா…”

என காலத்தால் அழியாத பெருமித மெய்ப்பாடு தற்போதிய நகை மெய்பாடு வெளிப்படுத்தும் வகையில் காலத்திற்கு ஏற்று அமைத்து கேளி செய்யலாம். அவை,

”சாதியன் என்று சொல்லடா…

தலை நிமிர்ந்து நில்லடா…”

## References

Bakthavatchasala Bharathi, (2018) Sathiyatra Tamilar Sathiya Tamilar, Bharathi Puthagalayam, Chennai, India

Meera (2003) Oosikal, Annam Veliyedu, Thanjavur, India

Tamilannal, (2002) Kurunthogai, Kovilur Madalayam, Kovilur, India

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author(s) 2020. The text of this article is open access and licensed under a Creative Commons Attribution 4.0 International License